செ.வெ.எண்:25 நாள்:16.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி ஆணையர்கள், சுகாதார ஆய்வாளர்கள், நகராட்சி பணியாளர்கள் கொண்டு சீமைக்கருவேலி மரங்கள் அகற்ற வேண்டி விழிப்புணர்வு தொடர்பான துண்டு பிரசுரங்களை (அவசர நோடீஸ்) வீடுவீடாக சென்று வழங்கி வருகின்றனர்.

மேலும் அரியலூர் நகராட்சிக்குட்பட்ட அய்யப்பன் ஏரி அருகில் உள்ள கருவேலி மரங்களை நகராட்சி பணியாளர்கள் மூலம் நவீன இயந்திரங்களைக் கொண்டு அகற்றப்பட்டு வருகிறது. மேலும், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசுக்கு சொந்தமான இடங்கள், சாலையோரங்களில் வளர்ந்துள்ள சீமைக்கருவேலி மரங்கள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக அகற்றப்பட்டு வருகின்றது. மேலும், பொதுமக்களுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் காலி மனைகளில் சீமைக்கருவவேலி மரங்களால் சுற்றுசூழல் பாதிப்பிற்குள்ளாவதால், நிலத்தின் உரிமையாளர்களே முழுமையாக அகற்றிவிட வேண்டும்.

மேலும், தவறும் பட்சத்தில் பட்டா நிலத்தில் உள்ள சீமைக்கருவேலி மரங்களை சட்டப்படி அகற்றிவிட்டு, அதற்கான செலவுத்தொகையை வருவாய் வசூலிப்புச் சட்டத்தின் கீழ் அபராதத்துடன் வசூல் செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.